தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 ஏப்ரல் 29, சனிக்கிழமை.

சித்திரை 16, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர். மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

வறியவராகிய தாழ்த்தப்பட்ட மக்களின் கடும் பசியைத் தீர்க்க வேண்டும்; அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருள் தமக்குப் பிற்காலத்தில் பயன்படுமாறு சேமித்து வைக்கும் இட மாகும்.

1. இரங்கற் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. இ. எல். இராகவ முதலியார் அவர்கள் 21—4—1989 ஆம் நாள் அன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. இ. எல். இராகவ முதலியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டி லிருந்து 1957 ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில பணியாற்றி யுள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப் பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்).

2. வினாக்கள்——விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று 20 வினாக்கள் இடம் பெறுவதால் அருள்கூர்ந்து துணைக் கேள்விகளைக் குறைத்து நேரடியாக அடுத்தடுத்த மூலக் கேள்விகளுக்கு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 29

ஒட்டப்பிடாரம் தொகுதியில் கல்லூரி.

149—(*வினா எண். 459) திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதியில் ஒரு கல்லூரி அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவ்வாறான கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

திரு. எம். முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இல்லை என்றாலும் இனிமேலாவது என்னுடைய தொகுதியில் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகள் தொடங்குவது என்பது அரசினுடைய பொருளாதார நிதிநிலை வசதிக்கு ஏற்பவும் மொத்தமாக நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிச்சயமாகத் தேவை என்று கருதப்படுகிற போதும் ஆராயப்படும்.

திரு. எம். முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று பரிவல்லிக்கோட்டையில் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அது வீணாகக் கிடக்கிறது. அங்கே கல்லூரி திறக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளி இருக்கிற காரணத்தால் கல்லூரி வரவேண்டும் என்று கருதுவதற்குப் போதுமான காரணம் இல்லை. இருந்தாலும் நிதிநிலையைக் கருதித்தான் கடந்த 3, 4 ஆண்டுக் காலமாகக் கல்லூரிகள் திறக்கப்படுவது இல்லை என்ற ஒரு முடிவு ஏற்பட்டிருக்கிறது. தனியார் நிதி வசதியைப் பொறுத்து அப்படிப்பட்ட சுயநிதிக் கல்லூரி தொடங்குவதாக இருந்தால் அது ஏற்கெனவே பரிசீலிக்கப் பட்டிருக்கிறது. அதுவும் கூட இப்போது உள்ள நிலைமையில் சுயநிதிக் கல்லூரி எந்த முறையில் நடத்தப்படும் என்பது பற்றி ஆராய்ந்துதான் முடிவு எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கல்லூரிகள் திறக்கப்படாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்டும் மேல்நிலைப் பள்ளியிலிருந்து லட்சக்கணக்கான

மாணவர்கள் வெளியே வருகிறார்கள். அவர்கள் எல்லாம் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் பெரும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். தனியார் கல்லூரிகளில் போய் பல்லாயிரக்கணக்கான பணத்தைக் கொடுத்து வசதியானவர்கள் சேருகிறார்கள். முடியாதவர்கள் வேறு வேலைக்கு—சும்மா வீட்டில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அல்லது ஒருவேலையும் இல்லாமல் சுற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, புதிதாக மேல்நிலைப் பள்ளியை முடித்து விட்டு வரக்கூடிய மாணவர்களுக்கு கல்லூரிகளில் இடம் கிடைக்கக்கூடிய முறையில் புதிதாக கலைக் கல்லூரிகளை இந்த அரசு ஆரம்பிப்பதற்கு யோசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியைப் பற்றி புதிய புதிய சிந்தனைகள் உருவாகி வருகின்றன. கல்லூரிக் கல்வி என்பது, படித்துப் பட்டம் பெறுகின்றவர்கள் தங்களுடைய அறிவாற்றலை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளைப் பொறுத்தும் அவர்கள் பெறக்கூடிய தகுதி, அரசு அலுவல்களிலே இடம் பெறுவதற்கான ஒரு வாய்ப்பாக இல்லாமல் அந்தக் கல்வியைக் கொண்டு அவர்கள் வேறுவிதமான தகுந்த அறிவுத் தொண்டாற்றக்கூடிய வாய்ப்பும் உருவாகக் கூடிய நிலையில் கல்லூரிக் கல்வி அமையவேண்டுமென்பது அண்மைக் காலத்திலே உருவாகி வருகின்ற கருத்து; இல்லையானால், மேன் பவர் வேஸ்டேஜ் என்று சொல்லப்படுகிற முறையில், மனித சக்தி—படிப்பதாகச் சொல்லி, கல்லூரியிலே சேருவதாகச் சொல்லி அந்த சக்தியும், நேரமும், பொருளும் விரயமானதற்குப் பின்னர் அதற்குத் தகுந்த பலன் உருவாகிறதா என்ற கேள்வி எழுந்திருக்கிற காரணத்தால், அரசாங்கத்தினுடைய நிதிநிலையும் முட்டுக்கட்டையாக ஒரு பக்கம் இருந்தாலும்கூட இவைகளும் சேர்த்து எதிர்காலத்திலே பரிசீலிக்கப்பட வேண்டும்.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசினுடைய நிதிநிலைக்கேற்ப புதிய கல்லூரி தொடங்குவது கடினம் என்று தெரிவித்தார்கள். ஆனால் தனியார் கல்லூரி தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்குமா? அப்படியானால் அதனுடைய விதிமுறைகள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டொரு சுய நிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. சிறந்த அறநிலையங்களால் தலைக் கட்டணம் என்ற 'கேப்பிடேஷன்ஃபீஸ் வசூலிக்கப்படாமல் மாணவர்களைச் சேர்க்கக்கூடிய வாய்ப்போடு கல்வி நிலையம் நடத்தப்படுமானால் அவை பற்றி பரிசீலிக்கலாம்.